**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் - 2019**

---

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. போக்குவரத்துச் செயற்திட்டங்களிற்கான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் என்பவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பேக்குவரத்துச் செயற்திட்டங்களிற்கு துணைபுரியும் அமுல்ப்படுத்தல் நிதியேற்பாடுகள் உள்ளடங்கலாக முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,853 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,405.06 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.69 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 447.94 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம்

தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணகீட்டுக் குறைபாடுகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான வடிவமைப்பிற்கான மதியுரைச் சேவைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் (1.1) மற்றும் செயற்திட்ட அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின விபரங்கள் என்பவற்றில் காட்டப்பட்ட தொகைக்கிடையே ரூபா 38.2 மில்லியன் தொகையான வேறுபாடுகள் | குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தனியான செலவின விபரங்கள் தெளிவாக காணப்படவில்லை. ஆகையால் அச் செலவினம் அவ்வாண்டில் ஏற்பட்டதென நாங்கள் ஊகித்திருந்தோம். விலைச்சிட்டைகளிற்காக செலுத்தப்பட்ட உள்ளபடியான தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான அவ் விலைச்சிட்டைகள் | வேறுபாட்டிற்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளுடன் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக செயற்திட்ட அலுவலகத்தால் மேற்குறிப்பிடப்பட்ட வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பான வற் கொடுப்பனவு என்பவற்றை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்திற்கான பின்னோக்கிய நிதி நோக்கத்திற்காக பெறப்பட்ட ரூபா 8.36 மில்லியன் தொகையான ஜீஓஎஸ்எல் நிதியானது பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் கூட்டு ஆதன அடுக்குமாடிக் குடியிருப்புக்களின் நிர்மாணத்திற்கான கொடுப்பனவாக கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்திற்கு தவறுதலாக மாற்றப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றில் காட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 8.36 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்ட அலுவலகத்தில் கணக்குகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்கு இல. 7002 இன் கீழ் விடுவிக்கப்பட்ட நிதிகளை கணக்கீடு செய்யும் பொருட்டும் இரண்டு வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு காசுப் புத்தகங்கள் பேணப்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 8.36 மில்லியன் (காசுப் புத்தக் இல. 7040317) மீதி காசுப் புத்தக இல. 704316 இற்கு மாற்றப்பட்டு சரியான முறையில் செலவிடப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்படாத மாற்றங்கள் மற்றும் கணக்கீட்டுத் தவறுகள் சீர்செய்யப்பட வேண்டும். |

**2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01/2016 ஆம் இலக்க எம்எஸ்டி சுற்றறிக்கை மற்றும் அமைச்சரவை தீர்மானம் | வெளிநாட்டு வளங்களிலிருந்தான செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீடு ஐ.அ.டொலர் 15 மில்லியனை விடக் குறைவாக இருந்ததனால் முகாமைத்துவ | செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உயர் கிரயங்கள் | 01/2016 மற்றும் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சம்பள படிமுறைகளில் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (2019 மார்ச் 15 இல் திருத்தப்பட்டது) அட்டவணை 01 இன் முதலாவது வகைப்படுத்தலின் கீழ் செயற்திட்டப் பதவியணியினரின் சம்பள அளவுத்திட்டங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சரவையானது அதன் மீதான செயற்திட்ட நடவடிக்கைகளை விஸ்தரித்து ஐ.அ.டொலர் 135 மில்லியனை முதலீடு செய்வதற்கு 2018 மே 16 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது. அத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீடு ஐ.அ.டொலர் 100 மில்லியனிற்கு குறைவாக இருந்த போதிலும் ஐ.அ.டொலர் 100 மில்லியனிற்கு மேற்பட்ட ஆரம்ப முதலீட்டுடனான செயற்திட்ட வகைப்படுத்தலின் கீழ் செயற்திட்டப் பதவியணியினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஐ.அ.டொலர் 100 மில்லியனிற்கு மேல்

சம்பளங்கள் வைக்கப்பட்டுள்ளன.

தொடங்குவதற்கு வெளிநாட்டு நிதிகளை ஆராய்வதற்கான ஒழுங்கு எதுவும் காணப்படாத போதிலும் மேற்படி சுற்றறிக்கை அறிவுறுத்தலிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 38 செயற்திட்ட பதவியணி உறுப்பினர்களிற்கு சம்பளக் கொடுப்பனவுகள் மூலம் ரூபா 12.89 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகள் ரூபா 4.49 மில்லியன் தொகையாக அறிக்கையிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**3. பௌதீக செயன்முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை வரிசையை வடிவமைத்து முன்னேற்றும் நோக்கங்களிற்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 379.21 மில்லியனிற்குச் சமமான யூரோ 256,030 (ஐ.அ.டொலர் 6.48 மில்லியன்) மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 திசெம்பர் 13 இல் வெளிநாட்டு மதியுரை நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வடிவமைப்பு மதியுரையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் அறிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் விபரமான பொறியியல் வடிவமைப்பு, பாதுகாப்புத் திட்டம் தயாரித்தல் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரித்தல் என்பன 50 சதவீத இலக்கை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் தேவையான செயலாற்றல் 40 சதவீதம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை வரிசையை வடிவமைத்து முன்னேற்றும் நோக்கங்களிற்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றதுடன் யூரோ 256,030 மற்றும் ஐ.அ.டொலர் 6.48 மில்லியன் மற்றும் ரூபா 379.21 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 திசெம்பர் 13 இல் வெளிநாட்டு மதியுரை நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. மதியுரை உடன்படிக்கையின் பிரகாரம் IV ஆம் பின்னிணைப்பின் 02 ஆம் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட விளைவு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கொடுக்கப்பட்ட அட்டவணைக்கு மைல்கல் கொடுப்பனவு (Milestone payment) மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வு நிதியாண்டினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 10 மதியுரையாளர் அறிக்கைகளில் 2019 திசெம்பர் 31 வரை பின்வரும் ஐந்து மதியுரை அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதியுரை உடன்படிக்கைகளின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட விளைவு பெறப்பட்டிருக்கவில்லை. | மோசமான ஒப்பந்த நிர்வாகம் | 2017 திசெம்பர் 13 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதியளவில் வெளியீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 விசேட அறிவாற்றலுடைய உத்தியோகத்தர்களால் ஒப்பந்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

- **(i)** கேவி வரிசைக்கான இறுதி சாத்தியவள அறிக்கை
- **(ii)** மருதானை தொடக்கம் பாதுக்கை வரைக்குமான (களனி பள்ளத்தாக்கு வரிசை, (விபரமான வடிவமைப்பு உள்ளடங்கலாக)) இறுதி வரைபு அறிக்கை மற்றும் கேள்வி கோரல் ஆவணங்கள்
- **(iii)** ஏனைய மூன்று செயற்திட்டங்களிற்கான வரைபு சாத்தியவள ஆய்வு அறிக்கை
- **(iv)** ஏனைய மூன்று செயற்திட்டங்களிற்கான இறுதி சாத்தியவள ஆய்வு அறிக்கை
- **(v)** கொழும்பு தொடக்கம் றம்புக்கணை வரைக்குமான (பிரதான வரிசை, (விபரமான வடிவமைப்பு உள்ளடங்கலாக)) இறுதி வரைபு அறிக்கை மற்றும் கேள்வி கோரல் ஆவணங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | களனிப் பள்ளத்தாக்கு புகையிரத வரிசையின் ஓரத்தில் வசிக்கின்ற குடும்பங்களை மீள்குடியேற்றும் நோக்கத்திற்காக 1,244 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு செயற்திட்ட அலுவலகம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஆறு புரிந்துணர்வு விஞ்ஞாபனங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட | மோசமான ஒப்பந்த முகாமைத்துவம் | சிறப்புக் கட்டமைப்பின் 50% ஆனது கொங்கிறீட் கட்டமைப்பின் 50% இனை பூர்த்திசெய்வதை கருதுகின்றதுடன் தளங்கள் முழுவதினதும் இவ் அளவீட்டு பூர்த்தியாக்கலில் சுவர்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. | அதே துறையில் விசேட அறிவாற்றலுடைய உத்தியோகத்தர்களால் கொடுப்பனவு நடைமுறை மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கூட்டு ஆதன கட்டிடத்தின் சிறப்பு கட்டமைப்பு தொடர்பான வேலைக்காக புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை கைச்சாத்திடும் நேரத்தில் ஒதுக்குதல் கட்டணமாக (முற்பணம்) 100% அல்லது 50% செலுத்தப்பட வேண்டுமென கொடுப்பனவு நடைமுறை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அடித்தள மட்டங்கள் கூரை மட்டங்கள் போன்ற சிறப்பு கட்டமைப்பு நிர்மாண விபரங்கள் புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 662,584,564 கொடுப்பனவை சரியானதென கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | | | |
| (இ) | இரண்டு தரப்பினர்களாலும் இணங்கப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை பின்னினைப்பு (iv)ஈ இன் பிரகாரம் நேர அட்டவணை அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாதத்திலும் நடவடிக்கைகள் மற்றும் வெளயீடு தொடர்பாக மதியுரையாளர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நேர அட்டவணை மற்றும் மதியுரையாளர் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் காலக்கெடுவை கருத்தில் கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது மதியுரை கட்டணமாக 390,220,493 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மோசமான ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கையின் 02 ஆம் அட்டவணையின் 07 ஆம் இலக்க வெளியீட்டு அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் ஒன்று காணப்படுகின்றது. இவ் வெளியீடு டிசம்பர் மாதம் அளவில் அனுப்பப்பட வேண்டியிருந்தது. அக்காலத்தில் வழங்கப்பட்ட வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் நீடிக்கப்பட்டிருந்தன. | விசேட அறிவாற்றலுடைய உத்தியோகத்தர்களால் ஒப்பந்த ஆவணம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

### 3.3 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| களனிப் பள்ளத்தாக்கு புகையிரத வரிசையின் ஓரங்களில் வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு குடியிருப்பு கூட்டு ஆதன அலகுகளை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வராத போதிலும் ரூபா 662.58 மில்லியன் தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் குடியிருப்பு கூட்டு ஆதன அலகுகளின் நிர்மாணத்தை அமுல்ப்படுத்துவதற்கு முழு நேர மற்றும் பகுதி நேர அடிப்படையில் விடுவிப்பதற்கு கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் பதவியணியினருக்கு ரூபா 26.51 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் செயற்திட்ட நிதி பயன்படுத்தப்பட்டமை. | 2017.10.17 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | 2017.10.17 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் களனி பள்ளத்தாக்கு வரிசையுடன் சேர்ந்த வலது புகையிரத பாதையில் வசிக்கின்ற குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் அதே புகையிரத வரிசையை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றதாக கருத்தில் கொள்ளப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் சிமாட் பயணச்சீட்டு வழங்கல் மற்றும் இருக்கை ஒதுக்கீட்டு முறைமை செயற்திட்ட நோக்கெல்லையின் கீழ் வராத போதிலும் சிமாட் பணயச்சீட்டு வழங்கல் மற்றும் இருக்கை ஒதுக்கீட்டு முறைமைக்காக மதியுரை சேவையை வழங்குவதற்கு தனிப்பட்ட மதியுரையாளருக்கு ரூபா 4.83 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அது தொடர்பான | செயற்திட்ட கிரயம் அதிகரிக்கும். | ஆர்ஈஜபி இன் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய சிமாட் பயணச்சீட்டு வழங்கல் மற்றும் இருக்கை ஒதுக்கீட்டு முறைமைக்கான வடிவமைப்பு மற்றும் செயற்திட்ட ஆவணங்களை தயாரிப்பதற்காக மதியுரைச் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ரூபா 4.83 | செயற்திட்ட நடவடிக்கைகளின் நோக்கெல்லை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

மீள்குடியேற்ற திட்டம் தயாரிப்பதற்கும் சமூக ஆய்வை மேற்கொள்வதற்கும் யூஎன்-கபிற்றற் இற்கு ரூபா 77.14 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது. எனினும், மேற்குறிப்பிட்ட செலவினம் செயற்திட்ட கிரயமாக கருதப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் அதிகார எல்லையின் கீழ் வராத போதிலும் புகையிரத வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு மதியுரையாளரிற்கு ரூபா 2.89 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்தது.